நாள் 26.09.2025 **CC 182/2019** அ.சா .

பெயர் ராம்குமார்

**எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜர்**

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் கு.வி)

(1) எதிரிகள் மீது உடுமலைப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 145/2016 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு பின்பு மடத்துக்குளம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 2019 ம் விசாரணைக்கு வந்தது என்றால் சரிதான். 29.09.2021ம் தேதி அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது அப்போது தெரியாது. போலீஸ் விசாரணையில் 4 பேர் கட்டிடத்திற்கு மேல் வந்து என்னை அடித்தார்கள் என்றும், 2 பேர் கையை பிடித்துக் கொண்டார்கள் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.2 நாகராஜ் எனது தகப்பனார் என்றால் சரிதான். அ.சா.3 பிரேமா எனது அம்மா என்றால் சரிதான். எனக்கும்,எதிரிகளுக்கும் இடம் சம்மந்தமாக ஏற்கனவே பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். இந்த வழக்குச் சம்பவத்திற்கும் அதற்கும் சம்மந்தம் இல்லை.

(2) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் காலை 11.00 மணி என்பதால் ஆட்கள் இருந்தார்கள் என்றால் சரிதான் கட்டிட வேலை ஆட்கள் இருந்தார்கள். வீடு கட்டக் கூடாது என்று எதிரிகள் எவ்வளவு நேரம் சத்தம் போட்டார்கள் என்றால் சத்தம் போடவில்லை நேரடியாக கட்டிடத்தின் மேல் வந்து அடித்தார்கள். அருகில் இருந்தவர்கள் விலக்கி விட்டார்களா என்றால் தெரியவில்லை. ஆம்புலஸ்க்கு யார் தகவல் சொன்னார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது எடுக்கப்பட்ட வீடியோ என்னிடம் உள்ளது. போலீசிடம் கொடுத்துள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை போலீசாருக்கு யார் அடையாளம் காண்பித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாரில் மற்றும் போலீசார் வாக்குமூலத்தில் எதிரிகளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அது சம்மந்தமாக ஆவணத்தை போலீஸில்

கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் சொன்னபடி சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சிவில் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த போது வேண்டுமென்றே எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.09.26 14:36:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்